**கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜுன் 06 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 14 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்கு 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய முத்திரை வரி பெறுமதியைக் கண்டறிந்து கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதியாண்டுக்குரிய வருமானம் சரியாக ஆவணங்களிலும் கணக்குகளிலும் காண்பிக்கப்பட வேண்டும். | காணி மற்றும் பதிவுக் காரியாலயத்தினூடாக 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணங்களின் பெறுமதி தற்போது பெறப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் சரியாகக் கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2017 ஆம் ஆண்டிற்கான மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 125,580 பெறுமதியான கணக்காய்வுக் கட்டணமானது மீளாய்வாண்டின் செலவாக கணக்கிடப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் கணக்காய்வுக் | நிதியாண்டுக்குரிய செலுத்த வேண்டிய அனைத்து செலவுகளுக்குமான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். முந்தைய வருடங்களுக்குரிய செலவுகள் சரியாக | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணத்துக்காக முன்னேற்பாடுகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் இணங்கச் செய்யப்பட வேண்டும். | |
| (iii) | 2018 ஜனவரி 01 அன்று நிலவிய நானாவித கடன் தொகை ரூபா 190,142 ஆனது மீளாய்வாண்டில் செலுத்தப்படும்போது 2018 ஆம் ஆண்டின் செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புக்களைத் தீர்த்தல் மற்றும் செலவுகளுக்கான கொடுப்பனவுகள் ஆகியவை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். நானாவித கடன்களை கணக்கிடும் போது பதிவேட்டில் குறிக்கும்போது தவறு நேர்ந்திருப்பதோடு அப் பெறுமதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. |
| (iv) | 2017 ஆம் ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய தொழிற் கடன் மீதியிலிருந்து மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 17,122,234 2018 ஆம் ஆண்டின் மூலதனச் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | பொறுப்புக்களைத் தீர்த்தல் மற்றும் செலவுகளுக்கான கொடுப்பனவுகள் ஆகியவை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். தொழிற் கடன்களை கணக்கிடும் போது பதிவேட்டில் குறிக்கும் போது தவறு நேர்ந்திருப்பதோடு அப் பெறுமதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) இணங்காத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 வரை கணக்கின் 04 வகைகளுக்குரிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிக்கும் உப ஆவணங்களின் பிரகாரமுள்ள மீதிக்குமிடையில் ரூபா 1,342,371 வேறுபாடு காணப்படுகிறது. | உரிய மீதிகளிலுள்ள வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்த்து கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆவணத்தைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 வரை வழங்கப்படாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூ அனுகூலக் கொடுப்பனவுகள் பெறுமதி | வழங்கப்படாத பெறுமதிகள் நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| ரூபா 765,847 ஆன போதிலும் பதிவேட்டில் அது ரூபா 748,780 ஆக ரூபா 17,067 குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. | | |
| (iii) மீளாய்வாண்டில் வருமான வகைகள் 02 இல் மீதி ரூபா 5,700,452 ஆக இருந்த போதிலும், ஆவணங்களுக்கிணங்க வருமானம் ரூபா 5,651,767 ஆகக் காணப்பட்டதால் ரூபா 48,685 வேறுபாடு இருந்தது. | நிதியாண்டுக்குரிய வருமானங்கள் சரியாக ஆவணங்களிலும் கணக்குகளிலும் காண்பிக்கப்பட வேண்டும். | வருமானத்தை ஆவணப்படுத்தும் போது இந்தக் குறை நேர்ந்துள்ளது. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 8 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாமல் இருக்கும் ரூபா 375,738 கிடைக்க வேண்டிய கணக்குகள் 2 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதி கண்டறியப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் தீர்க்க இயலாது போயுள்ளது. 2019 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 08 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகள் 03 இன் கூட்டுப் பெறுமதியான ரூபா 725,020 கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த மீதி கண்டறியப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் தீர்க்க இயலாது போயுள்ளது. 2019 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 6,771,447 உடைய கணக்கு வகைகள் 5 இற்குரிய விரிவான உப ஆவணங்கள் மற்றும் வயது பகுப்பாய்வுகள் முன் வைக்கப்படாமையால் | நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கும் பெறுமதியை உறுதிப்படுத்தத் தேவையான | தேவையான உப ஆவணங்களை ஒழுங்கான முறையில் தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் செயற்பட முடியவில்லை. | எழுத்து மூல அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | | |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1951 இலக்கம் 14 உடைய மோட்டார் வாகனச் சட்டம் 203 ஆம் அதிகாரம் | சபைக்குரிய 02 ட்ரக்டர் வண்டிகளும் ஒரு டேலர் வண்டியும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலத்தில் அந்த வாகனங்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள் | | | |
| | நி.பி.1647 (உ) | சபைக்குரிய வாகனங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நி.பி.1647 இணங்க வாகனங்கள் தொடர்பாக ஆவணமொன்றைப் பேண சம்பந்தப்பட்ட உததியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன். |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br><br>2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை. | கைவில் அடையாள உபகரணத்தை நிறுவுவதுவும், மேலதிக நேரத்தில் மற்றும் விடுமுறை நாட்களில் பணி புரிவதை அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் பணி புரியும் மணித்தியாலங்களைக் கொண்டு தீர்மானிப்பதுவும் நடைபெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைரேகை அடையாள உபகரணத்தை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. |

| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான புறம்பான நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணினி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு பராமரிப்பதற்கு விடய உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார். வருகின்றது. |
|---|---|---|---|---|

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,355,178 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,694,977 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,722,112 | 1,856,994 | 1,442,851 | 1,381,358 | 971,520 | 1,735,413 | 1,405,666 | 967,015 |
| (ii) | வாடகை | 8,696,221 | 7,011,975 | 7,240,204 | 1,264,387 | 7,616,577 | 7,306,058 | 7,059,845 | 1,492,616 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 3,802,500 | 2,816,330 | 2,816,330 | 276,781 | 2,622,500 | 3,495,141 | 3,495,141 | 276,781 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,230,500 | 5,092,868 | 3,092,852 | 4,023,416 | 7,528,000 | 5,785,303 | 6,755,440 | 2,023,400 |
| | மொத்தம் | 23,451,333 | 16,778,167 | 14,592,237 | 6,945,942 | 18,738,597 | 18,322,015 | 18,716,092 | 4,759,812 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 134 ஆவது பிரிவின் பிரகாரம் மேம்படுத்த்ப்பட்ட பிரதேசங்கள் வெளியிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்காமலே வீதவரிகளை அறவிடுதல் நடைபெற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் காரணமாக நிலுவையிலிருக்கும் ரூபா 1,381,358 வீத வரி வரிகளின் எண்ணிக்கை தொடர்பாக நிதி மற்றும் நிர்வாக விதிகள் 32 இலிருந்து 42 வரையுள்ள விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் ஆகியவற்றை உடனடியாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ஆண்டு வருமானத்தில் 60மூ அறவிடப்பட்டுள்ளதோடு ஆண்டின் நிலுவைத் தொகை மற்றும் முந்தைய வருடங்களின் நிலுவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக நடமாடும் சேவையொன்றை நடத்தியாவது அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 வாடகை

------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய இறைச்சிக் கடைகள், மீன் பலகைகள், வாகனங்களைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சபைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 903,138 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாதிருக்கும் நிலுவை வருமானங்களை அறவிடத் தேவையான சட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். | இது சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு அறிவுறுத்தி, மத்தியஸ்த வாரியத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று ஒரு சிலரிடம் பகுதி பகுதியாக நிலுவைத் தொகையை அறவிட்டுள்ளதோடு, நிலுவையிலிருக்கும் மீதிகளை அறவிடத் தேவையான நடவடிக்கைகளை இனியும் மேற்கொள்வேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய சபைக்குக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதியைக் கண்டறிந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டண வருமானத்தை சரியாகக் கணக்கிட்டு அறவிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது 2016,2017,2018 ஆண்டுகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் பற்றிய உப ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறிதத் விடயங்கள் தொடர்பாக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப விதிகள் தயாரிப்பதற்காக நடவடிக்க எடுப்பதற்கு விடயப பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் செயற் திட்டங்களின் பிரகாரம் ஆண்டிற்குள் முடிக்கப்படத் | பிரதேச சபை நிதி வலிமை மற்றும் ஏற்பாடுகளுக்கு | செயற் திட்டங்களுக்கு இணங்க பல திட்டங்கள் திட்டமிடப்பட்ட போதிலும், |

| | | |
|---|---|---|
| திட்டமிட்டிருந்த செயற் திட்டங்கள் 11 இல் செயற்திட்டங்கள் 07 நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்ப செயற் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | சபையின் மானியப் பற்றாக்குறை காரணமாக ஏனைய திட்டங்களை செயற்படுத்த இயலவில்லை. |

**(இ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்த எண்ணியிருந்த ரூபா 100,000 மஹகிரிமெடியாவ சுகுனாராமய மேம்பாட்டுத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டுக்குரிய திட்டங்கள் அந்தந்த ஆண்டுக்குள்ளேயே பூர்த்தி செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்தத் திட்டத்தில் சிக்கலொன்று இருப்பதன் காரணத்தால் செயற்படுத்த முடியாதிருப்பதை கலாசார விவகாரங்கள் அமைச்சிடமும் அறியத் தரப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியிருக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையில் 2018 திசெம்பர் 31 வரை 4 ஆரம்ப மட்ட பதவிகளில் 08 வெற்றிடங்களும், 3 இரண்டாம் மட்ட பதவிகளில் 04 வெற்றிடங்களும் காணப்பட்டதோடு 04 சாதாரண ஊழியர்களும் பதவிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | ஊழியர் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.3 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய பேரூந்து நிலைய இல 04 கடையானது 2017 திசெம்பர் மாதத்திலிருந்து வெறுமனே காணப்படுகிறது. | குறைபாடுகளை பூரணப்படுத்தி உடனடியாக குத்தகைக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் சபை நடவடிக்கை களுக்காகப் பயன்படுத்த வேண்டும். | இந்தக் கடைக்கு விலை மனுக் கோரிய போதும் எவரும் எடுக்க முன்வராததால் இந்தக் கடை வெறுமனே காணப்படுகிறது. எதிர்வரும் காலத்தில் விலை மனுக் கோரவோ சபையின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தவோ நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டுக்குரிய கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததோடு 2019 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகை**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(I)(I) ஆம் இலக்க நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துவதற்கு விடய உததியோகத்தர்கள் அறிவூட்டப்படுவர் |